சார்பு நீதிமன்றம், குளித்தலை

OS.No. 255/2022

பெயர்: ஈஸ்வரன் வா.சா.1 தேதி **24.09.2025**

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

1. நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணையில் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட மணத்தட்டை கிராமம் புல எண்.127/1ற்கு கட்டுப்பட்ட நிலம் 65 சென்ட் என கூறியுள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதிகள் என்ன கட்சி செய்து வருகிறார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். மேற்படி புல எண்.127/1 நிலமானது பிரதிவாதியினுடையது அல்ல என கட்சி செய்து வருகிறார் என்றால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட மேற்படி நிலத்தினை நான் போக்கியத்திற்காக அனுபவம் செய்து வருகிறேன் என்பது தான் எனது வழக்கு. நான் அனுபவம் செய்து வருவதாக கூறக்கூடிய நிலமானது எத்தனை தாக்குகலாக உள்ளது என்றால் ஒரே சதுரமாகத்தான் உள்ளது. மேற்படி நிலத்தை எவ்வளவு ஆண்டுகாலமாக அனுபவம் செய்து வருகிறேன் என்றால் 11.01.2018 முதல் அனுபவம் செய்து வருகிறேன். இரண்டாம் பிரதிவாதியின் அப்பா காலத்தில் தாவா சொத்தை போக்கியத்திற்காக நான் அனுபவம் செய்து வருகிறேனா என்றால் என் அப்பா அனுபவம் செய்து வந்தார். மேற்படி இரண்டாம் பிரதிவாதியின் அப்பா காலத்தில் வைக்கப்பட்ட போக்கியத்தை மீட்கப்பட்டு விட்டதா என்றால் மீட்கப்பட்டுவிட்டது. மேற்படி போக்கியம் எந்த தேதியில் எப்போது யாரால் மீட்கப்பட்டது என்றால் நாகமணியின் மகள் மீட்டுவிட்டார். எந்த தேதி என்று தெரியாது. மேற்படி போக்கியம் மீட்கப்பட்ட சமயத்தில் பெற்ப்பட்ட ஆவணங்களை பிரதிவாதியிடம் திருப்பி கொடுத்துவிட்டோமா என்றால் கொடுத்துவிட்டோம். அவ்வாறு ஆவணங்களை திருப்பி கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. மேற்படி ஆவணங்களை பிரதிவாதிகளுக்கு நாங்கள் திருப்பி கொடுக்கவில்லை என்றும், நளினியின் குடும்பத்திடம் உள்ளது என்றும், அதை திருப்பி வாங்கிகொடுத்துவிடுவதாக நாங்கள் சொன்னோம் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் எங்களை வாழை சாகுபடி செய்து அறுவடைக்கான சமயத்தில் இடையூறு செய்ததாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோமா என்றால் 2022ம் ஆண்டு கொடுத்தோம். இவ்வழக்கில் பிரதிவாதிகள் எந்த தேதியில் எங்களை அனுபவத்திலிருந்து அப்புறப்படுத்திவிட்டார்கள் என்றும், அதற்காக வட்டியும் சேர்த்து இவ் வழக்கில் கோரிக்கை வைத்துள்ளோம் என்றால் தேதி ஞாபகமில்லை 2018ம் ஆண்டு. நாங்கள் வழக்கில்

கூறியுள்ள 2018ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ரூ.1,40,000/- பிரதிவாதிகளுக்கு கொடுத்து அனுபவித்து வந்ததாகவும், இவ்வழக்கிற்கு முன்பு எங்களை சுவாதீனத்திலிருந்து அப்புறப்படுத்திவிட்டதாக கூறுவது இவ்வழக்கிற்காக உற்பத்தி செய்த சங்கதி என்றால் சரியல்ல. நான் கடந்த 11.01.2021 முதல் வட்டி கோரியுள்ளேன் என்றால் சரிதான். போலிசார் எங்களை விசாரித்து வழக்கில் உள்ள ஆவணங்கள் பொய்யான ஆவணங்கள் என்று சொல்லி அனுப்பிவிட்டார்கள் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் கண்ட தொகையினை செலுத்திய விபரம் நளினி என்பவருக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனக்கும் நளினிக்கு என்ன உறவு என்றால் அண்ணி முறை. நாங்கள் கூட்டுக்குடும்பமாக வசித்து வந்தோம்.04.11.2018 தேதியிட்ட ஆவணம் எதுவும் பிரதிவாதிகள் பிறப்பித்துக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. 11.01.2018ல் ரூ.1,40,000/- பிரதிவாதிகள் பெறவில்லை என்றால் சரியல்ல. 11.01.2018 என்கின்ற ஆவணத்தை நானும், சாட்சிகளும் சேர்ந்து பொய்யாக தயார் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு சர்வேஎண்.129/1ல் தான் சொத்து உள்ளது என்றால் சரியல்ல. மகாத்மா காந்தி ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தில் பிரதிவாதிகள் சொத்துக்கு வரப்புகள் அமைத்து சீர்செய்வதற்காக அரச நிதியுதவி செய்தார்கள் என்றாலும், மேற்படி தொகையினை எனது பெயரில் நான் பெற்றுக்கொண்டேன் என்றாலும் சரியல்ல. பிரதிவாதிகள் தகவல் அறியும் உரிமைச்சட்டத்தில் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் விண்ணப்பம் சமர்ப்பித்து அதன் அடிப்படையில் அவர்கள் கொடுத்த பதிலில் நான் தான் மேற்படி தொகையை பெற்றுக்கொண்டேன் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின்படி தகவலை பெற்றதற்கு பின்னிட்டு தொகை குறித்து பிரதிவாதிகள் கேட்டார்கள் என்றும், அதனால் தான் நான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கோரிய பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/- ( ஈ.முத்துசாமி)
சார்பு நீதிபதி
குளித்தலை.